# 2018 சனவரி 01ம் திகதி தொடக்கம் தூதரகத்தின் வழியே புதிய கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ளும் இலங்கையர்களுக்கான அறிவித்தல்

**இலங்கை அரசாங்கத்தின் புதிய சட்ட விதிமுறைகளுக்கமைய 2018 சனவரி 01ம் திகதி தொடக்கம் தூதரகத்தின் வழியே கடவுச்சீட்டு பெற்றுக்கொள்ளும் 16 வயது தொடக்கம் 60 வயதுக்குட்பட்ட சகலரும் இலங்கை செல்லும் முதற் சந்தர்ப்பத்தின் போதே கொழும்பு , பத்தரமுல்லயில் உள்ள குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துக்கு அல்லது குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கண்டி, மாத்தறை, வவுனியா மற்றும் குருநாகல் பிரதேச அலுவலகங்களுக்கு சென்று தங்களது உயிர்மான தரவுகளை (விரல் அடையாளத்தை) பதிவு செய்தல் கட்டாய தேவைப்பபாடாகும். உயிர்மான தரவுகளை பதிவு செய்ய தவறும் எந்தவொரு நபரும் இலங்கையிலிருந்து வெளியேற இயலாது.**

**இதற்கமைய 2018 சனவரி 01ம் திகதி தொடக்கம் தூதரகத்தின் வழியே பெற்றுக்கொண்ட கடவுச் சீட்டினை பயன்படுத்தி இலங்கை செல்லும் போது குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துக்கு சென்று தங்களது உயிர்மான தரவுகளை பதிவு செய்வதற்கு ஏற்ற வகையில் தங்களது பயண ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்-படுகின்றீர்கள்.**

**இந்நடைமுறைகளின் நிமிர்த்தம் பயன்படுத்தப்படவுள்ள புதிய கடவுச்சீட்டு விண்ணப்பபடிவம் கடவுச்சீட்டு அறிவுரை தள பகுதியில் (Consular Page) இணைக்கப்பட்டுள்ளது**

**இலங்கை தூதவர், ரோம்-இத்தாலி**